DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No.43/2026

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி வாக்குமூலம்

| | |
|---|---|
| Name | சிவகாமி |
| Father's Name | க/பெ.வரதராஜபெருமாள் (Late) |
| Village | தூத்துக்குடி |
| Taluk | |
| Religion | |
| Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2026.

**<u>மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் இந்த வழக்கின் 2 வது மனுதாரர். நான் இன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து பார்க்கப்பட்டு அதில் கையெழுத்திட்டுள்ளேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா.ஆ 1,** விபத்து குறித்த வாகன அறிக்கை நகல் **ம.சா.ஆ 2,** மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் **ம.சா.ஆ 3,** இன்சூரன்ஸ் பாலிசி நகல் **ம.சா.ஆ 4,** எனது கணவர் தூத்துக்குடி, முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு AROP No.91/2014 சான்றிட்ட நகல் **ம.சா.ஆ 5,** எனது கணவர் வரதராஜ பெருமாள் இறப்பு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ 6,** எனது கணவர் வரதராஜ பெருமாள் வாரிசு சான்று நகல் **ம.சா.ஆ 7,** எனது ஆதார் கார்டு நகல் **ம.சா.ஆ 8,** 3 ம்

மனுதாரர் ஆதார் கார்டு நகல் **ம.சா.ஆ 9,** 4ம் மனுதாரர் ஆதார் கார்டு நகல் **ம.சா.ஆ 10,** 5ம் மனுதாரர் ஆதார் கார்டு நகல் **ம.சா.ஆ 11,** எனது பான் கார்டு நகல் **ம.சா.ஆ 12,** 3ம் மனுதாரர் பான் கார்டு நகல் **ம.சா.ஆ 13,** 4ம் மனுதாரர் பான் கார்டு நகல் **ம.சா.ஆ 14,** 5ம் மனுதாரர் பான் கார்டு நகல் **ம.சா.ஆ 15,** எனது வங்கி கணக்கு புத்தகம் நகல் **ம.சா.ஆ 16,** 3ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் நகல் **ம.சா.ஆ 17** , 4ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் நகல் **ம.சா.ஆ 18,** 5ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் நகல் **ம.சா.ஆ 19** ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

விபத்தில் காயம் பட்ட நபர் எனது கணவர். எனது கணவர் வழக்கு நடந்த காலத்தில் அவரது ஊனச்சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை. விபத்து நடந்த விபரம் எனது கணவருக்கு தெரியும் எனக்கும் தெரியாது. விபத்து எனது கணவரின் கவனக்குறைவினால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்தற்கு பின்பு 4 ஆண்டுகளுக்கு பின்னர் எனது கணவர் இறந்தார் என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் எனது கணவர் இந்த வழக்கிற்காக நீதிமன்றம் வந்துள்ளார். முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள AROP 91/2014 வழக்கு தற்போது நிலுவையில் உள்ளதா அல்லது முடிந்து விட்டதா என்று எனக்கு தெரியாது. என் கணவர் நடத்திய நிறுவனம் சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவற்றை எனது கணவர் தான் பார்த்து வந்தார். என் கணவர் இறந்து 4 மாதங்கள் கழித்துதான் எங்களை தரப்பினராக சேர்க்க மனுதாக்கல் செய்துள்ளேன்.

என் கணவர் உயிருடன் இருக்கும்போது கோரிக்கை மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் அதன் பின்னர் 1414 நாட்கள் காலதாமதமாக மீண்டும் வழக்கை கோப்பிற்கு எடுக்க மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த காலகட்டத்திற்கு எனக்கு வட்டிதொகை கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கான இழப்பீடு தான் நான் பெற முடியும் என்றும் இறப்பிற்கான இழப்பீட்டு பயன் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. என் கணவர் வீட்டில் இருக்கும்போதுதான் இறந்தார். இறப்பிற்கு முன்பு சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேடிப்பார்க்க வேண்டும். என் கணவர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் தான் இறந்தார் என்பதற்கு எந்த மருத்துவ ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை -</u> இல்லை.**

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**